2021 பிப்ரவரி 26]

கொள்கின்ற சமுதாயத்தைச் சார்ந்தவர்கள். அவர்களுடைய நலன் கருதி, இன்று மாலைக்குள், பூம்பூம் மாட்டுக்காரர் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தருவதற்கு, என்னுடைய பாசத்திற்குரிய மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் இப்பொழுதே அறிவிப்பாரா என தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பூம்பூம் மாட்டுக்காரன் தெருவில் வந்தாண்டி" என்று சொல்வதுமாதிரி, ஒரேயடியாக இன்றே, இப்பொழுதே அறிவிக்க முடியுமா என்று கேட்கிறார்கள். இதற்கு அரசு சில விதிமுறைகளை வைத்திருக்கிறது. உங்கள் கோரிக்கை, நியாயமான கோரிக்கை. அதுவும் பின்தங்கிய பகுதியாக இருக்கின்ற காரணத்தால், கல்வியிலே உயர வேண்டிய அந்த மாணவர்களுடைய எதிர்காலத்தை மனதிலே கொண்டு, நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தனி கவனத்திற்கு எடுத்துச் சென்று, அதைப் பற்றி அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 32, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. பரமேஸ்வரி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

32—

துணை மின் நிலையம்

***41779—திருமதி மு. பரமேஸ்வரி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மணச்சநல்லூர் தொகுதி, சணமங்கலம் ஊராட்சியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

[2021 பிப்ரவரி 26

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய தொகுதியில் சணமங்கலம் ஊராட்சியில் புதிய துணை மின் நிலையம் வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். அங்கே மின் பளு குறைவாக இருக்கின்ற காரணத்தால் புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை. எதிர்காலத்தில் தேவையிருப்பின், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. பரமேஸ்வரி அவர்கள்.

திருமதி மு. பரமேஸ்வரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களின் நெஞ்சங்களிலெல்லாம் நிறைந்து வாழ்ந்து, இன்று நம்மிடையே இல்லை என்றாலும் தமிழக மக்களின் குடும்ப தெய்வமாக, குல தெய்வமாக வாழ்ந்து மறைந்திருக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதந்தொட்டு வணங்குகின்றேன்.

காலம் தந்த கொடையாய், கருணைக் கடலாய், பாசத்தை வாரி வழங்கும் நம் அம்மாவின் நிழலாய், சோதனைகளையெல்லாம் சாதனைகளாக மாற்றிக் காட்டிய சாதனைத் தலைவி, புரட்சித் தலைவி அம்மாவின் தளபதியாய் வளர்ந்து, நம் தமிழகத்திற்கு, அம்மாவின் ஆட்சியை நாடு போற்றும்விதமாய் நல்லாட்சி வழங்கி, தமிழகத்தை அமைதிப் பூங்காவாய் கொண்டு செல்லும், தமிழக மக்களின் நம்பிக்கை நட்சத்திரம் எங்கள் அண்ணன், இந்த நாட்டின் மன்னன், கொங்கு மண்டலம் தந்தெடுத்த தங்கம், கொங்கு நாடு கண்டெடுத்த சிங்கம், (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தின் நிரந்தர முதலமைச்சர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களை வணங்குகின்றேன்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நம்பிக்கை நட்சத்திரம்; மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய திருச்சி மாவட்ட மண்டல பொறுப்பாளர், அன்பிற்கும், மரியாதைக்கும், பாசத்திற்கும் உரிய அண்ணன் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகின்றேன். மரியாதைக்குரிய அண்ணன் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமயபுரம், சணமங்கலம் என மாங்குடி SS-ன்கீழ் 27 கிராமங்கள் உள்ளன. அந்தப் பகுதிகளில் விவசாய நிலமும், பஞ்சு மில்லும் அதிகமாக உள்ளதால், சணமங்கலத்தை மையமாகக் கொண்டு ஒரு துணை மின் நிலையம் அமைத்துத் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அண்ணன், மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய சணமங்கலத்திற்கு, 8 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சிறுகனூரில் உள்ள 110/22 கிலோ வாட் துணை மின் நிலையத்திலிருந்து மின்சாரம் வருகின்றது. அங்கே 2 x 10 M.V.A. திறன் கொண்ட மின்மாற்றிகள் இருக்கின்றன. அதனுடைய மின் பளுவே இப்பொழுது 9 M.V.A. தான். ஆக, இன்னொரு 10 M.V.A. கூடுதலாகவே இருக்கின்ற காரணத்தினால், எதிர்காலத்தில் தேவைப்படின் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. பரமேஸ்வரி அவர்கள்.

திருமதி மு. பரமேஸ்வரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மணச்சநல்லூரில் கிட்டத்தட்ட 48 rice mills இயங்கி வருகின்றன. அந்த rice mills–க்குத் தேவையான

மின்சாரம். 5 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள சமயபுரம். 110 KV SS–லிருந்து வந்துகொண்டிருக்கிறது. அங்கிருந்து வரக்கூடிய மின்சாரம் அந்த rice mills–ஐ இயக்குவதற்குப் போதுமான அளவில் இல்லை. அடிக்கடி * மின்தடை, low voltage ஏற்படுவதால் rice mills–ஐ இயக்க முடியவில்லை. ஆகையால், மணச்சநல்லூரிலேயே ஒரு துணை மின் நிலையம் அமைத்துத் தருமாறு மாண்புமிகு அண்ணன் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்றபோது ஒரு தவறான வார்த்தையை, அதாவது ** என்று சொல்லியிருக்கிறார்கள். ** கிடையாது. வேண்டுமென்றால் மின்தடை ஏற்பட்டிருக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற பகுதி விவசாயம் நிறைந்த பகுதியாக இருக்குமென்று நினைக்கிறேன். விவசாயத்திற்காக 9 மணி நேரம் அல்லது 12 மணி நேரம் மின்சாரம் கொடுக்கின்ற பகுதியாக இருந்தால் மற்ற நேரங்களில் three phase current இல்லாமல் இருக்கும். அதனால் மின்சாரம் தடைபட்டிருக்கலாம். மாண்புமிகு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் இப்போது அனைத்து விவசாயிகளுக்குமே மும்முனை மின்சாரம் வழங்கப்படும் என்று அறிவித்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, அனைத்து விவசாயப் பகுதிகளிலே இருக்கின்ற தொழிற்சாலைகளாக இருந்தாலும் சரி, rice mills ஆக இருந்தாலும் சரி, இனிமேல் தொடர்ந்து மும்முனை மின்சாரம் கிடைக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ** என்பதை மின்தடை என்று மாற்றிக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படியே மாற்றிக் கொள்ளப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் V.P.B. பரமசிவம் அவர்கள்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2021 பிப்ரவரி 26]

டாக்டர் V.P.B. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடுகின்ற வள்ளலாராய்” விவசாயிகளினுடைய துயர் துடைக்கின்ற விதமாக, 12,110 கோடி ரூபாய் அளவுக்கு பயிர்க் கடனைத் தள்ளுபடி செய்து, 24 மணிநேரமும் மும்முனை மின்சாரம் வழங்கப்படும் என்ற வரலாற்றுச் (மேசையைத் தட்டும் ஒலி) சிறப்புமிக்க அறிவிப்பினைத் தந்திருக்கின்ற, விவசாய முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3A1 Tariff என்ற அடிப்படையிலே தொழிற்சாலைகளுக்கும், commercial establishments–க்கும் மின்னிணைப்பு வழங்கப்படுவதைப்போல, விவசாயிகளுக்கும் 3A1 Tariff என்ற அடிப்படையில் மானிய விலையிலே மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. அத்தகைய மின்னிணைப்பு மூலமாக விவசாயிகள் விவசாயத்தை மேற்கொள்கின்றபோது, 2 ஏக்கர் நிலத்தில் பயிரிடுகின்ற விவசாயி, 2 மாதத்திற்கு ஒருமுறை மின்கட்டணம் கட்ட வேண்டுமென்று சொன்னால், அவருக்கு அந்த 3A1 Tariff மூலமாக ரூ.8,000 முதல் ரூ.10,000 வரை மின்கட்டணம் கட்ட வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்படுகின்றது. அந்த வகையிலே, அவருடைய விளைபொருளுக்குக் கிடைக்கின்ற இலாபத்திலிருந்து ஒரு பெரிய தொகையான ரூ.10,000–ஐ மின் கட்டணமாகச் செலவிட வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்படுகின்ற காரணத்தால், தமிழ்நாட்டிலே பல்வேறு மாவட்டங்களிலே இந்த 3A1 Tariff அடிப்படையிலே மின்னிணைப்பு வாங்கியிருக்கின்ற விவசாயிகளை இலவச மின்சாரத் திட்டத்தின்கீழ் இணைப்பதற்கு மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். அதாவது, நிருவாகச் சிக்கல் இருக்கின்றபட்சத்திலே, 3A1 Tariff அடிப்படையில் இருப்பவர்களுக்கு one–time scheme–ல் மின்னிணைப்பை வழங்கி, அவர்கள் விவசாயம் செய்வதற்கு, உடனடியாக ஒரு திட்டத்திலே இணைந்துகொண்டு, பிறகு இலவச மின்னிணைப்பைப் பெறுவதற்கு ஆவன செய்யுமாறு கேட்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

[2021 பிப்ரவரி 26

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது, விவசாய மின்னிணைப்புக்காக காத்திருப்போர் உடனடியாக விவசாயம் செய்வதற்காக 3A1 tariff–ல் வாங்கியிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது, அவர்களுடைய சொந்த தேவைக்காக இப்போது நாங்கள் கட்டி வாங்குகின்றோம். எப்போது எங்களது வரிசை வருகின்றதோ அப்போது தடையில்லாத மின்சாரம், இலவச மின்சாரத்தை கொடுப்பதற்கு நாங்கள் ஒத்துக்கொள்கிறோம் என்று வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கோரிக்கை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற ராஜாகிருஷ்ணன் அவர்கள்.

திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற ராஜாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா உறங்கும் திசை நோக்கி வணங்குகிறேன். மாண்புமிகு அம்மாவினுடைய அரசை வழிநடத்தி, தனது ஆளுமைத் திறமையால் மீண்டும் தமிழக முதல்வராக மக்கள் மனதில் இடம்பெற்று, தமிழக முதல்வராக மீண்டும் வரவிருக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மாவின் அரசுக்கும், மாண்புமிகு முதலமைச்சருக்கும் நல் ஒத்துழைப்பை நல்கிக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், பேச வாய்ப்பு வழங்கிய தங்களுக்கும் எனது வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்தியூர் சட்டமன்றத் தொகுதி, பர்கூர் ஊராட்சி அதிக நிலப்பரப்பைக் கொண்ட முழுக்க, முழுக்க மலை சார்ந்த பகுதியாகும். இந்த மலைப் பகுதிக்கு unit அலுவலகம் வேண்டுமென்ற எனது கோரிக்கையை ஏற்று, unit அலுவலகம் அமைத்து, திறப்பு விழாவையும் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் ஏற்படுத்திக் கொடுத்தார்கள். அதற்கு மீண்டும் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2021 பிப்ரவரி 26]

மலைப் பகுதியில் மின் கம்பிகள் மேலே செல்வதால் காற்று, மழை வரும்போது, மரங்கள் சரிவதால் மின்தடை ஏற்படுகின்றது. எனவே, பர்கூர் ஊராட்சியில் துணை மின் நிலையம் அமைக்க வாய்ப்பிருந்தால், அமைத்துக் கொடுக்க வேண்டும் அல்லது அந்தக் கம்பத்திலேயே கேபிள் மூலமாக லைனை கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்தால், அங்குள்ள மலைவாழ் மக்களுக்கு தடையில்லாமல் மின்சாரம் கிடைக்கும். எனவே, இதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்டு, அமைகிறேன்.

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டு, உடனடியாக அங்கே* unit *அலுவலகத்தைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுத்தார்கள். அதேபோல, மலைப் பகுதிகளில் இயற்கைச் சீற்றத்தின் காரணமாக அடிக்கடி மின் தடை ஏற்படுகின்றது என்றும், அதற்காக கேபிள் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்றும் கேட்டிருக்கின்றார்கள். பொதுவாக, மலைப் பிரதேசங்களில் கேபிள் அமைக்க வேண்டுமென்று சொன்னால், வனத் துறையினுடைய அனுமதி பெற வேண்டும். அதுமட்டுமல்லாமல், அந்தப் பகுதியிலே விலங்குகளின் நடமாட்டம் இருக்கின்ற காரணத்தினால், பொதுவாக அதற்கு வனத் துறை அனுமதி கொடுப்பது கடினம். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 33, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*